# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2016. 01. 18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹர்சன ராஜகருணா அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00**　　**தபாற் செலவு : ரூபா 10.00**

## இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத் தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் " கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள் நிறுவகம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா

வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) இலங்கையில் சுற்றாடலியல் தொழில் வல்லுநர்களின் மகிமை, புகழ் ஆகியவற்றை உயர்த்தல், மேம்படுத்தல் ;

(ஆ) பொதுமக்கள் மத்தியில் சுற்றாடல் கல்வியை பரவச் செய்தல் ; அத்துடன்

(இ) இலங்கையில் இயற்கை மற்றும் பௌதீக சுற்றாடலை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்.

கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள்.

**4.** கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் பின்வருமாறு :-

(அ) சுற்றாடலியல் தொழில் வல்லுநர்கள், திட்டமிடல் அதிகாரிகள் மத்தியில் தொடர்பாடல்களை வளர்த்தல் மற்றும் சமூக, பொருளாதார, சுற்றாடல் நோக்கங்களுக்கு மத்தியில் சமநிலையை பேண உதவி செய்தல் ;

(ஆ) தேசிய, சர்வதேச சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான நடைமுறைக் கல்வியினை இனம்கண்டு மதிப்பீடு செய்து அதனை மேம்படுத்தல் ;

(இ) சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான விஞ்ஞான ரீதியான தெளிவை அதிகரிக்கும் நோக்குடன் ஆராய்ச்சி துறைகளை மேம்படுத்தலும் அதற்கு உரமூட்டுதலும் ;

(ஈ) சுற்றாடல் தகவல்களை பரப்பும் நோக்கில் இலத்திரனியல் ஒன்லைன் முறை மற்றும் தரவுத்தளம் ஆகியவற்றுடன் இணைப்பை ஏற்படுத்தல் ;

(உ) சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான தெளிவினை மேம்படுத்தல், அதற்காக வசதியளித்தல் மற்றும் விஞ்ஞானிகளையும் ஏனையோரையும் பயிற்றுவித்தல்;

(ஊ) சுற்றாடலியல் விவகாரங்களில் சரியான வழிகாட்டுதல் களை மேம்படுத்தல் ;

(எ) அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் தொடர்பான பிரச்சினை கள் மத்தியிலான கலந்துரையாடல்களுக்காக களம் அமைத்துக்கொடுத்தல் ; அத்துடன்

(ஏ) சுற்றாடல் தொடர்பான வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் அதனை ஆதரித்தல்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவ முடையதாய் இருத்தல் வேண்டும் :- கூட்டுத்தாப னத்தின் பொதுத் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்விக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) இக்குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு அல்லது நிறுவகத்தின் தத்துவங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங் களை நேரடியாகவோ அல்லது நிறுவகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் அல்லது அதிகாரி மூலமாக செய்துகொள்வதற்கு அல்லது நடைமுறைப் படுத்துவதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அவசியமான கற்கைநெறிகளை செயல் படுத்துவதற்கு, பரீட்சைகளை நடாத்துவதற்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் ;

(ஈ) பேரவையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நிதிகளை முதலீடு செய்வதற்கு, நிரந்தர, நடைமுறை வைப்புகள், சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் ;

(உ) பேரவை நியாயமெனக் கருதும் விதமாக, அவ்வாறான பிணையொன்றின் மீது கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு அவசியமான முறையில் பணங்களை முற்கொடுப்பனவு செய்ய, கடன்வழங்க, கடனாகப் பெறல் ;

(ஊ) உறுப்பாண்மை, உறுப்பாண்மைக்கான அனுமதி, நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சை, கற்கைநெறிகளுக்கான அனுமதி ஆகியவற்றின் கட்டணங்களை தீர்மானிப்பதற்கும் ;

(எ) காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் :

ஆயின் குழுவானது, கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப் பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்து மூலமான முன் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(ஏ) நியமனம், தொழிலுக்கமர்த்தல், சேவை மாற்றம், வேலை நீக்கம், நிறுவகத்தின் ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவை ஒப்பந்தங்கள் ஆகியவற்றை புரிவதற்கும் ; அத்துடன்

(ஐ) பொதுவில் நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறானவையும் அதன் இடைநேர் விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை.

**6.** (1) கூட்டுத்தாபனமானது பின்வரும் உறுப்பாண்மை பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) உறுப்பினர் ;

(ஆ) பட்டய உறுப்பினர் ;

(இ) இணை உறுப்பினர் ;

(ஈ) சகா உறுப்பினர் ;

(உ) மாணவ உறுப்பினர் ;

(ஊ) கௌரவ உறுப்பினர் ;

(எ) கூட்டு உறுப்பினர் ;

(ஏ) ஆயுட்கால உறுப்பினர்.

(2) இச்சட்டத்தின் மூலம் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஒவ்வோர் உறுப்பாண்மைக்குமான தகைமைகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) மேலே (1) ஆம் பந்தியின் (அ), (ஆ), (இ), (எ), (ஏ) ஆகிய பிரிவுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் நிறுவகத்தின் பேரவைக்கு அல்லது எல்லா உபகுழுவுக்குமாக தேர்ந்தெடுக்கப்பட தகுதிவாய்ந்தவராகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அனைத்து உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் கொண்டிருப்பதுடன் வாக்களிப்பதற்கான உரிமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான கட்டணம்.

**7**. (1) இச்சட்டத்தின் 6 ஆம் இலக்க வாசகத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காக தகுதி வாய்ந்த ஒருவர் பொருத்தமான உறுப்பாண்மை பிரிவில் குறித்த கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் இணைத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(2) இவ்வாசகத்தின் (3) ஆம் இலக்க பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காக உள்ளீர்த்துக் கொள்ளப்படும் ஒருவரின் உறுப்புரிமை அதே ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும் ; அத்துடன் அவர் குறித்த கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் அவ்வுறுப்புரிமையை மீளப் புதுப்பித்துக் கொள்ள தகுதி வாய்ந்தவராவர்.

(3) ஆண்டு வாரியாக சந்தா அடிப்படையிலோ அல்லது ஆயுட்கால சந்தா அடிப்படையிலோ உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என உறுப்பாண்மைக்கான விதிகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதல் வேண்டும்.

பெயர்களின் பின்னால் பட்டங்களைப் பயன் படுத்துதல்.

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் இணை உறுப்பினர் தவிர்ந்த தரத்தின் உறுப்பினர்கள் தமது பெயரின் பின்னால் M.I.E.P. (Sri Lanka) எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும் ; கூட்டுத்தாபனத்தின் பட்டய உறுப்பினர் உறுப்பினரொருவர் தரத்தில் இணைந்து கொண்ட ஒருவர் தமது பெயரின் பின்னால் C. Env (Sri Lanka) எனும் எழுத்துக்களைப் பயன்படுததும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இணை உறுப்பினரொருவரர் தரத்தில் இணைந்து கொண்ட ஒருவர் தமது பெயரின் பின்னால் F.I.E.P. (Sri Lanka) எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) மேலே (1) ஆம், (2) ஆம் உப பந்திகளில் உறுப்பினராக இல்லாத ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தமது பெயரின் பின்னர் பட்டங்களை அல்லது எழுத்துக்களை எடுத்தலோ பயன்படுத்தலோ இயலாது.

பேரவையின் உறுப்பாண்மை.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள நிறவகத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப் படும். (இதனகத்துப்பின்னர் "பேரவை" என அழைக்கப்படும்) ஆளும் பேரவையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய பதவி தாங்குநர்கள் அடங்கிய கூட்டுத்தாபனத்தின் அப் போதைக்கு வலுவலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப் படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று ஆளும் பேரவையில் உறுப்பினர்களாக பதவி தாங்கியோரைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(4) பேரவையின் உறுப்பினர் எவரினதும் காலம் முடிவடைவ தால் ஏற்படும் வெற்றிடத்திற்கு அவர் மீண்டும் தெரிவு செய்யப் பட உரித்துடையவராவார்.

(5) பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் இறப்பினால், பதவி விலகுவதினால் அல்லது பதவி நீக்கப்படுவதினால் தவிர ஓராண்டு காலம் பதவி வகித்தல் வேண்டும்.

(6) பேரவையின் உறுப்பினரொருவர் தமது பதவி விலகுவதி னால் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்புரிமை முடிவடைவதி னால் பேரவை உறுப்பாண்மையிலிருந்து வெற்றிடமாதல் வேண் டும்.

(7) பேரவை உறுப்பினரொருவரினது இறப்பினால் அல்லது வேறுவகையினால் ஏற்படும் வெற்றிடத்திற்கு பேரவை, அவரின் இடத்திற்கு இன்னுமோர் ஆளை நியமித்தல் வேண்டும் ; அத்தகையவர் குறித்த வெற்றிடமாகிய உறுப்பினரின் மிஞ்சிய காலப் பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சட்டங்களோ அல்லது நடைமுறைகளோ செல்லுபடியற்றதாகக் கூடாது.

**10.** கூட்டுத்தாபனத்தின் சட்டங்களோ அல்லது நடைமுறைகளோ பேரவையின் காணப்படும் வெற்றிடம் காரணமாகவோ அல்லது பேரவைக்கான உறுப்பினரின் நியமனத் தவறேதும் காரணமாகவோ செல்லுபடியற்றதாகக் கூடாது.

பேரவையின் கூட்டங்கள்.

**11.** (1) பேரவைக் கூட்டங்கள் ஒவ்வோர் மாதமும் குறைந்தது ஒரு முறையேனும் கூட வேண்டும்.

(2) செயலாளர் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னரேனும் பேரவைக் கூட்டம் தொடர்பிலான எழுத்திலான முன்னறிவித்தலொன்றை ஒவ்வோர் அங்கத்தினருக்கும் விடுக்க வேண்டும்.

(3) இவ்வாசகத்தின் (2) ஆம் உபபிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறாக இருப்பினும், செயலாளர், பேரவையின் தலைவர் அல்லது பத்து உறுப்பினர்களின் எழுத்துமூல அறிவித்தலின் மீது 7 நாட்களுக்குள் விசேட கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(4) தலைவர் அனைத்து பேரவைக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்க வேண்டும் ; தலைவர் சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பேரவை உறுப்பினரொருவர் அவ்வாறானதோர் கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டும்.

(5) தலைவர் அல்லது மேலே (4) ஆம் உட்பந்தியின்கீழ் தலைமை வகிக்கும் உறுப்பினர் ஒருவர் தனது சொந்த வாக்கு உரிமைக்கு மேலதிகமாக அறுதி வாக்கொன்றிற்கான உரிமை உடையவ ராவார்.

(6) இவ்வாசகத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவலிருக்கும் சட்டத்திற்கும் உட்பட்டு பேரவையானது தனது கூட்டங்களுக்கான நடைமுறைகளையும் அதன் அலுவல்களையும் தீர்மானிக்க உரித்துடையதாய் இருத்தல் வேண்டும்.

பேரவையின் கூட்டங்களும் சட்டமியற்றும் அதிகாரமும்.

**12.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, இச்சட்டத் தின் எந்தவித விவகாரங்களுக்காகவும் வேண்டப்பட்டவாறான சட்டங்களை ஆக்குவதற்கும், இச்சட்டத்தின் மூலம் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வேண்டப்பட்ட அவ்வாறான சட்டங்களை ஆக்குவதற்கும் பேரவை உரித்துடைய தாய் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி யொன்றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) பேரவையின் பொதுக்கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் இருபத்தைந்து பேர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இவ்வாசகத்தின் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட பொதுவான தத்துவங்களுக்கு பங்கமேதுமின்றி பின்வரும் கருமங் கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் பேரவைக்கு சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை அனுமதித்தல், இணைத்துக் கொள்ளு தல், அவர்களை விலக்குதல், உறுப்பாண்மைக்கான தகுதிகள், தகுதியீனங்கள், உறுப்பாண்மைக்கான படிவம் மற்றும் அத்தாட்சிப் பத்திரம் உறுப்பாண்மை இடாப்பு, உறுப்பாண்மைக் கட்டண அறவீட்டுக்கான விலக்களிப்பு அல்லது கட்டண குறைப்பு, உறுப்பாண் மைக் கட்டணங்களைச் செலுத்தாமைக்கான விளைவு, உறுப்பினர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள், கடமை கள்;

(ஆ) பேரவையின் ஆயுட்காலம், தகுதியீனங்கள் மற்றும் தேர்வுக்கான முறைகள், பதவி விலகுதல், பதவி வெற்றிடமாதல், பதவிக்கமர்த்தல், அலுவலக வெற்றிடம் அல்லது பதிவு, அவ்வெற்றிடங்களுக்காக உறுப்பினர்களை நியமித்தல், பேரவையின் உரிமைகள், கடமைகளை பகிர்ந்தளித்தல், நிறுவகத்தின் உபகுழுக்களின் மற்றும் பேரவையின் நியமனம் ;

(இ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுவது அல்லது நடாத்துவது, அதற்கான அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல், அதன் கூட்ட நடப்பெண் மற்றும் அதன் அலுவல்களை நடாத்துதல் ;

(ஈ) நிறுவகத்தின் சொத்துக்களை முகாமை செய்தல் மற்றும் நிதிகளை வைத்திருத்தல் ;

(உ) தொழில்சார் நெறிகளை நிறுவுதல் ;

(ஊ) ஒழுக்காற்று விசாரணைகள் சம்பந்தமான ஒழுங்கு முறைகள், ஒழுக்காற்று குழுக்களை நியமித்தல், அவற்றுக்கு அவசியமான சட்ட ஆலோசனைகளுக்கான உதவிகளை வழங்குதல், முறைப்பாடுகளுக்கான படிவங்கள், அறிவித்தல் விடுத்தல், ஆட்களுக்கு அழைப்பு விடுத்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளின் அறிக்கைகளை பாதுகாத்தல் மற்றும் அவ்வாறான குழுக்களின் அறிக்கைகள் ;

(எ) நிறுவகத்திற்குத் தேவையான ஊழியர்கள், அலுவலர்கள், சேவையாளர்களை நியமித்தல் ;

(ஏ) அவ்வாறான ஊழியர்கள், சேவையாளர்களை நீக்கம் செய்தல் மற்றும் அவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ;

(ஐ) அவ்வாறான அலுவலர்கள், சேவையாளர்களின் சம்பளம், வேதனம் மற்றும் ஊதியங்களை தீர்மானித்தல் ; அத்துடன்

(ஒ) அவ்வாறான அலுவலர்கள், சேவையாளர்களின் சேவை ஒப்பந்தங்களை தீர்மானித்தல்.

(5) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைந்தோராதல் வேண்டும்.

**13.** (1) (அ) முறையானதோர் நீதிமன்றமொன்றினால் சித்தசுயாதீனமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் ;

பொதுவான தகைமை யீனங்கள்.

(ஆ) கடன்தீர்க்க வகையற்றவர், ஓட்டாண்டி என தீர்ப்பளிக்கப்பட்டவர், ஆனால் அவரது கடன்தீர்க்க வகையற்ற, ஓட்டாண்டித் தன்மை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தவிர்க்க முடியாத இழப்பின் மீது அல்லது துரதிஷ்டம் காரணமாக நேர்ந்துள்ளது என தீர்ப்பளிக்கப்படாத ஒருவர் ; மற்றும்

(இ) இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ முறையானதோர் நீதிமன்றத்தினால் ஒழுக்க வீனம் மீது சிறைவாசம் அல்லது அதேபோன்ற தண்டனை வழங்க ஆனால் சுதந்திரமான பொதுமன்னிப்பு அளிக்கப்படாத தவறுக்காக குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர்.

நிறுவனத்தின் உறுப்பாண்மைக்காக சேர்த்துக் கொள்ளப்பட தகுதியற்றவராவார்.

(2) பேரவை, இவ்வாசகத்தின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த உறுப்பினரும் தகைமையீனமுடையவராகும் இடத்து அத்தகைய ஆளுடைய உறுப்பாண்மையை நிறுவகத்தினின்றும் இரத்துச் செய்ய வேண்டும் :

ஆயின், பேரவையானது, பின்னர் உறுப்பாண்மைக்கான தகுதிகளை பூர்த்திசெய்யுமிடத்து அவ்வாறானதோர் இரத்துச் செய்தல் அவர் மீண்டும் உறுப்பாண்மைக்கான தகுதி பெறு வதைத் தடைசெய்தலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் நிதி.*

**14.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் தனது கடமைகள், காரியங்களை நிறைவேற்றுகையில் கிடைக்கப்பபெற்றுக்கொண்ட அவ்வாறன அத்தகைய பணங்களும் ; மற்றும்

(ஆ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியில் கடன், மானியங்கள், நன்கொடைகளாகக் கிடைக்கப்பெற்ற அவ்வாறான அத்தகைய பணங்களும்,

நிறுவகத்தின் நிதியில் வைப்பிலிடப்பட வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் வேண்டப்பட்ட நிறுவகத்தினால் தனது கடமைகள், காரியங்களை நிறைவேற்றுகையில் உறப்பட்ட அவ்வாறான அத்தகைய செலவினங்களுக்கான பணங்களும் அதன் நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு.*

**15.** கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**16.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பேரவையின் தீர்மானத்தின் மூலம் செயலாளர் மற்றும் பேரவையின் வேறு இரு உறுப்பினர்கள் அல்லது பேரவையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக இன்னுமோர் உறுப்பினரது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*தகவல்களை வெளியிடுவதை தடைசெய்தல்.*

**17.** பேரவையின் உறுப்பினர் அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தமது காரியங்களை நிறைவேற்றுகையில் பெற்றுக்கொண்ட எத்தகையதுமான தகவல்களை இச்சட்டத்தின் ஏற்பாடு

களின்கீழ் தமது காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான விதத்திலன்றி அல்லது ஒரு நீதிமன்றத்தின் சட்டத்தினால் அவ்வாறு பணிக்கப்பட்டாலன்றி எந்த ஒரு நபருக்கும் வெளியிட லாகாது.

*எவரேனு மாளினால் உறப்பட்ட செலவினத்தை கூட்டுத்தாபனம் தீர்த்தல்.*

**18.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது பேரவையின் கட்டளையின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக உத்தேசிக்கப்பட்ட ஏதேனுமோர் செயல் தொடர்பாக அவருக்கு எதிராக ஏதாவதொரு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு அல்லது குற்ற வழக்கு ஒன்றின் மூலம் நீதிமன்றம் அத்தகைய செயல் நன்னோக்கத்திற்காக புரியப்பட்டதென தீர்ப்பளிக்கும் பட்சத்தில் அத்தகைய நபருக்கு ஏற்பட்ட செலவினங்கள் கூட்டுத் தாபனத்தின் நிதியினால் கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**19.** (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவ ரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்

தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**20.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**21.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்